# அருவருப்பான அரசியல் தறிகெட்டுப்போகும் கிரிக்கெட்

கிரிக்கெட் விளையாட்டு கண்ணியமான கனவான்களின் ஆட்டம் என்பது அதன் ஆதரவாளர்களின் நம்பிக்கை. இல்லையில்லை, அது பதினோரு முட்டாள்கள் ஆடுவதை பல்லாயிரம் முட்டாள்கள் வேடிக்கை பார்க்கும் விஷயம் என்பதாக பெர்னாட்ஷா சொல்லியிருக்கிறார். அவர் சொன்ன இரு பிரிவுகளிலும் தாற்காலிகமாக இருந்து வெளியேறி வந்து விட்டேன்.

கல்லூரி வரும்வரை கிரிக்கெட்டில் ஒன் டவுன் பேட்ஸ்மேனாக ஆடிய நான் ஓரிரு முறை என் கண்ணாடி உடைந்து, மயிரிழையில் என் கண்கள் தப்பியதையடுத்து விளையாடுவதை விட்டுவிட்டு அம்பயராகவும் ஸ்கோரராகவும் பிறகு பார்வையாளராகவும் மெல்ல மெல்ல மைதானத்தை விட்டு வெளியே வந்துவிட்டேன்.

ஆடுகிறவருக்கு மட்டுமே சுவையான ஆட்டம் கிரிக்கெட் என்பது என் கருத்து. நான் பள்ளிக்காலத்தில் ஆடிய பிற ஆட்டங்களான சடுகுடு, கால்பந்து முதலியவையும் வாலிபால், கூடைப்பந்து, ஹாக்கி முதலியவையும், மட்டுமே பார்ப்பவருக்கும் சுவையான ஆட்டங்கள். கால்பந்தைப் போல குறுகிய நேர ஆட்டமாக கிரிக்கெட்டையும் ஆக்கி 20-20 வரை கொண்டு வந்த பின்னரே கிரிக்கெட்டையும் ஓரளவு பார்க்க சுவையானதாக மாற்ற முடிந்திருக்கிறது.

இப்போது கிரிக்கெட் விளையாட்டாக இல்லாமல் சூதாட்டமாகவும் வியாபாரமாகவும் முற்றிலும் மாற்றப்பட்டுவிட்டது. கிரிக்கெட் வீரர்களை ஏலம் போட்டிருக்கிறார்கள். தலைக்கு இரண்டு கோடி ரூபாய் முதல் நான்கு கோடி ரூபாய் வரை ஏலத்தொகை!

மொத்தம் எட்டு அணிகளைக் கொண்டு 'இந்தியன் பிரீமியர் லீக்' என்ற பெயரில் போட்டிகளை நடத்தப் போவதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சங்கம் அறிவித்தது. முதல் ரவுண்டில் அணிகளை

விற்றார்கள். சென்னை அணியை வாங்கியது தி.மு.க.வுக்கு நெருக்கமான தொழில் நிறுவனமான இந்தியா சிமெண்ட்ஸ். பெங்களூரு அணி சாராய அதிபர் விஜய் மல்லையாவுடையது. டெல்லி அணி ஜி.எம்.ஆர். என்ற ரியல் எஸ்டேட் கம்பெனிக்குச் சொந்தம். கொல்கத்தா அணியின் அதிபர் நடிகர் ஷாருக்கான். ஹாக்கி பற்றி 'சக்தே' படம் எடுத்து சம்பாதித்த ஷாருக் இந்த அளவு பணத்தை ஹாக்கிக்குத் தரவில்லை. மும்பை அணியின் முதலாளி ரிலயன்ஸ் முகேஷ் அம்பானி. ஹைதராபாத் அணியின் உரிமையாளர் டெக்கான் கிரானிகிள் பத்திரிகை. மொஹாலி அணியின் முதலாளி ஜவுளி அதிபர் வாடியா. ஜெய்ப்பூர் அணியை வாங்கியது கிரிக்கெட்டையே வியாபாரமாக நடத்துவதற்கென்றே தொடங்கப்பட்டிருக்கும் ஒரு கம்பெனி. இதற்கு, நெருக்கமானவரான லலித் மோடி இந்திய கிரிக்கெட் வாரியத்தின் இணைத்தலைவர்; சிகரெட் கம்பெனியான காட்பிரே பிலிப்சின் அதிபர்; ஏல அடிப்படையில் நடத்தப்படும் பிரீமியர் லீக் அமைப்பின் தலைவர்.

மொத்தமாக இந்த வர்த்தகத்தில் புரளும் தொகை சுமார் 7000 கோடி ரூபாய்கள்! எங்கிருந்து இந்தப் பணம் வரும்? பல்லாயிரக்கணக்கான முட்டாள்கள் டி.வி. முன்னாலும் மைதானத்திலும் திரளுவதால் வரும் விளம்பர வருவாயும் டிக்கெட் விற்பனைத் தொகையும்தான் இது! அதாவது மக்கள் பணம்தான்.

வர்த்தக சினிமாவைப் போலவே இப்போது உருவாக்கப்பட்டுள்ள வர்த்தக கிரிக்கெட் வெறும் வர்த்தகம் மட்டும் அல்ல. இதற்குப் பின்னால் இருக்கும் அரசியல் கவனிக்கப்பட வேண்டும். சென்னைக் குழுவின் முக்கிய ஆட்டக்காரர்கள் யார் தெரியுமா? ஆறுமுகம், தமிழ்ச்செல்வன், சீனிவாசன், ரமேஷ் கோபால் போன்ற பெயர்கள் அல்ல. தோனி! ஜோகிந்தர் ஷர்மா! சுரேஷ் ரெய்னா ! ஜேக்கப் ஓராம் !

இதுவரை இந்தியாவில் வட்டாரவாரியாக நடத்தப்பட்ட லீக் மேட்சுகள், ரஞ்சி போன்றவற்றின் நோக்கமே வட்டார வாரியாக திறமையாளர்களை அடையாளம் கண்டு தேர்வு செய்வதுதான். இப்போது மொழி, வட்டார அடையாளங்களை அழித்துவிட்டு, வட்டாரத்தின் பெயரால் டீம்கள் உருவாக்கப்படுகின்றன. பெரும் தொகைகள் புரளுவதால் இது பற்றி யாருக்கும் அக்கறையில்லை.

அடுத்த கட்டமாக 'ஏலத்தில் பிடித்து வரப்பட்ட ஆஸ்திரேலியரை இந்திய அணியில் ஆட வைத்தால் என்ன குடி முழுகிப் போய்விடும்?'

என்ற கேள்வி வரும். சென்னை அணியில் தென் ஆப்ரிக்கர் ஆடலாம் என்றால், இந்திய அணியிலும் ஆடட்டுமே.

சினிமா, கிரிக்கெட் வணிகமயமானதையடுத்து எனக்கு ஒரு புது யோசனை. அரசியலிலும் இதே ஏல முறையைக் கொண்டு வரலாமே. சுப்பிரமணியன் சுவாமி, ராமதாஸ் போன்றோர் முன்கை எடுத்து இதைப் பரிசீலிக்கலாம்.

அம்பானிகள், மல்லையா, ரஜினிகாந்த், ஷாருக்கான், போன்றவர்களின் கம்பெனிகளிடம் அரசியல் கட்சிகளை ஏலத்தில் எடுக்கச் சொல்லிவிடலாம். காங்கிரஸ், பி.ஜே.பி, தி.மு.க, பா.ம.க, அ.தி.மு.க, ம.தி.முக என்று எல்லா கட்சிகளையும் முதல் கட்ட ஏலம் விடலாம். அடுத்த ரவுண்டில் எந்தக் கட்சிக்கு எந்தெந்த தலைவர்கள் வேண்டும் என்று ஏலம் விடலாம். கிரிக்கெட் ஆட்டக்காரர்களில் டெண்டுல்கர், கங்குலி, திராவிட் போன்றோருக்கு ஸ்டார் அந்தஸ்து கொடுத்து அதிக தொகை நிர்ணயித்தது போல் கருணாநிதி, ஜெயலலிதா, சசிகலா, விஜய்காந்த், ராமதாஸ், திருமா முதலியோரை 'ஏ' அந்தஸ்தில் வைக்கலாம். அடுத்த இடத்தில் ஸ்டாலின், அழகிரி, கனிமொழி, தயாநிதி, வைகோ... கடைசி ரவுண்டில் காங்கிரஸ் புள்ளிகள், நல்லகண்ணு, தா.பாண்டியன், வரதராசன் போன்றவர்களை இலவச இணைப்பாகக் கொடுத்துவிடலாம். திறமையான மேடைப்பேச்சாளர்களுக்கு தனி ஏலம். நாஞ்சில் சம்பத், சி.மகேந்திரன், வெற்றிகொண்டான் என்று பட்டியல் தயாரிக்கலாம். தாதாக்கள், ரவுடிகளுக்கு இன்னொரு பட்டியல் இன்னொரு ரேட். சரியான டயத்தில் கூட்டணி மாறும் யோசனை தரும் கன்சல்டண்ட்டுகளுக்கும் ஏலம் வைக்கலாம்.

இப்படியெல்லாம் நடந்துவிடக்கூடாது என்றுதான் விரும்புகிறேன். கிரிக்கெட்டில் நடப்பதைப் பார்க்கும்போது, எதுவும் நடக்கும் என்று பயமாக இருக்கிறது. எனக்கே தெரியாமல் என்னைக் கூட யாராவது ஏலத்தில் விட்டுவிடக் கூடும்!

கலைஞர் டி.வி. மன்னிப்பு கேட்கவேண்டும்!

ஜெலலிதாவுக்கு அறுபது வயதானதால், பகிரங்க கடவுள் நம்பிக்கையாளரான அவர், தன் தோழி சசிகலாவுடன் திருக்கடையூர் கோயிலுக்குப் போய் சாமி கும்பிட்டார். கோயில் சிவாச்சாரியார் ஜெயலலிதாவிடம் ஒரு மாலையைக் கொடுத்தார். அதை அவர் சசிகலாவுக்குச் சூட்டினார். சிவாச்சாரியார் ஒரு மாலையை

சசிகலாவிடம் கொடுத்தார். அவர் ஜெயலலிதாவுக்குச் சூட்டினார். பின்னர் இருவரும் மாலையைக் கழற்றி பக்கத்தில் இருந்த உதவியாளரிடம் கொடுத்தார்கள். இதைப் படம் எடுப்பதோ வீடியோ எடுப்பதோ தடுக்கப்படவில்லை. படங்களும் வீடியோக்களும் வெளியாகியிருக்கின்றன.

கலைஞர் கருணாநிதியின் குடும்பத்தினருக்குச் சொந்தமான கலைஞர் டி.வி. இந்தச் செய்தியை திரும்பத் திரும்பக் காட்டி கொச்சைப்படுத்தியது. அறுபதாம் கல்யாணம் கொண்டாடும் தம்பதிகள் வழக்கமாக கும்பிடும் திருக்கடையூர் கோயிலில் ஜெ.வும் சசியும் மாலை மாற்றிக் கொண்டது சரியா என்ற கேள்வியை கலைஞர் டி.வி. எழுப்பியது. பொது மக்களின் பேட்டிகளை ஒளிபரப்பியது. பெண்ணுக்குப் பெண் மாலை மாற்றினால் என்ன அர்த்தம் என்ற தொனியில் இந்தச் செய்திக் கோவை அமைந்திருந்தது.

மாலை மாற்றினார்கள் என்று கலைஞர் டி.வி.யும் மக்கள் டி.வி.யும் ஹிந்து பத்திரிகையும் சொல்லியிருப்பது தவறு. சசிக்கு ஜெ. மாலை அணிவித்தார். ஜெ.வுக்கு சசி மாலை அணிவித்தார். அவ்வளவுதான். மாலை மாற்றும் சடங்கு என்பது தன் கழுத்தில் இருக்கும் மாலையை எடுத்து மற்றவருக்கு அணிவிப்பதேயாகும். அப்படி எதுவும் நடக்கவில்லை.

ஆனால் அப்படி ஒன்று நடந்தது போல கலைஞர் டி.வி. செய்தி ஒளிபரப்புவதும் தி.மு.க. ஆதரவு ஏடுகள் கிசுகிசுப்பதும் எதற்காக? எதையும் உடைத்துப் பேசித்தான் எனக்குப் பழக்கம். ஜெ.-சசிகலா இருவரும் ஓரின உறவு உடையவர்கள், லெஸ்பியன்கள் என்று அவதூறு செய்வதுதான் இந்த முயற்சிகளின் நோக்கம். நேரடியாகச் சொன்னால் அவதூறு வழக்கு வரும் என்பதால் மறைமுகமாகச் சொல்லும் முயற்சி செய்யப்படுகிறது. எவ்வளவு அருவருப்பான அரசியல் இது?

பொது வாழ்க்கையில் கண்ணியம் பற்றி தன் 75-ம் வயதுக்குப் பிறகு அடிக்கடி பேசத்தொடங்கியிருக்கும் கலைஞர், உடனடியாக கலைஞர் டி.வி.யின் செய்தி ஆசிரியரை இந்தச் செய்திக் கோவை ஒளிபரப்பிற்காக ஜெயலலிதா, சசிகலா இருவரிடமும் பகிரங்கமாக நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்கச் சொல்ல வேண்டும். மேலிடத்து சம்மதம் இல்லாமல் எந்த டி.வி. சேனல் செய்தி ஆசிரியரும் இப்படிப்பட்ட ஒளிபரப்புகளைச் செய்யமாட்டார்கள் என்பது

எல்லாருக்கும் தெரியும். எனவே, மன்னிப்பு கேட்கும் தார்மீகக் கடமை கலைஞருக்கும் ராமதாஸுக்கும் கூட இருக்கிறது.

ஜெயலலிதா, சசிகலா இருவரின் அரசியல், ஆட்சி முறை, அணுகுமுறைகள், மதிப்பீடுகள் இவை எதனுடனும் எனக்கு உடன்பாடு இல்லை. ஆனால் பொது வாழ்க்கையில் இருக்கும் பெண்கள் என்பதால் அவர்களை ஆணாதிக்கப் பாவையுடன் பார்க்கும் சூழல்தான் இங்கே இருக்கிறது என்பதை அவர்களுடைய கடுமையான விமர்சகர்கள் கூட ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

தமிழகத்தின் அரசியல் முற்றிலும் ஆண் ஆதிக்கப் பார்வையுடைய அரசியல் என்பதனால்தான், கலைஞர் டி.வி.யின் முறைகேடான செய்தி ஒளிபரப்பு பற்றி மௌனம் நிலவுகிறது. முற்போக்கும் பெண்ணியமும் பேசும் இடதுசாரிகளும் தி.மு.க.வைச் சேர்ந்த பெண்ணியக் கவிஞர்களான கனிமொழியும் தமிழச்சியும் சல்மாவும் மௌனத்தை உடைத்து கருத்துத் தெரிவித்தாக வேண்டும்.

இந்த ஆணாதிக்க அரசியலில் விஜய்காந்த் குடிகாரரா என்று விவாதம் எழுந்தால், ஒரு கட்டத்தில் அவர் வெறுப்பாக 'ஆமாய்யா. நான் குடிப்பேன். இப்ப என்னங்கறே?' என்று கூடச் சொல்லிவிட்டு அடுத்த வேலையைப் பார்க்கப் போய்விட முடியும். அதை இங்கே ஒரு பெண் செய்ய முடியாது. இன்னும் நூறாண்டுகள் ஆனாலும் கூட இங்கே ஒரு பெண் முதலமைச்சராகி, தன்னுடன் நிகழ்ச்சிகளுக்கு தன் கணவரையும் துணைவரையும் அழைத்து வருவது பற்றிக் கனவு கூட காணமுடியாது. அந்தச் சலுகை தொடர்ந்து ஆண்களுக்கு மட்டுமே கோவலன் மரபிலான தமிழ்ச் சமூகத்தில் தரப்படும்.

நாளைக்கு நம் அரசியலில் ஒரு லெஸ்பியன், ஓர் அரவாணி ஒரு ஹோமோ செக்ஸுவல் பொறுப்புக்கு வரக் கூடாதா? வரும் தகுதி அவர்களுக்குக் கிடையாதா? என்பதுதான் என் கேள்வி. பிரிட்டனில் ஓரின உறவாளர் அமைச்சராக இருக்கிறார். இன்று உலகம் முழுவதும் ஓரின உறவினர், அரவாணிகள் பற்றிய பார்வைகள் மாறிவருகின்றன.

தமிழ்ச் சமூகம் மட்டும் போலியான ஒழுக்கக் கோட்பாடுகளுடன் நடித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. அடுத்த தேர்தலின்போது ஒவ்வொரு கட்சியும், செக்ஸ், ஆண்-பெண் உறவு, ஒழுக்க விதிகள் பற்றியெல்லாம்

தன் கொள்கை என்ன என்பதையும் தன் தேர்தல் அறிக்கையிலே சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**குமுதம் 05.03.08**

## இந்த வார பூச்செண்டு

தமிழ்நாட்டில் ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரை தமிழை ஒரு மொழிப்பாடமாகக் கட்டாயம் படிக்க வேண்டும் என்று தி.மு.க. அரசு பிறப்பித்த அருமையான உத்தரவு சட்டப்படி செல்லும் என்று தீர்ப்பளித்துள்ள உச்ச நீதிமன்றத்துக்கு இ.வா.பூ.

## இந்த வாரக் கேள்வி

ஜல்லிக்கட்டைப் பாதுகாப்பாக நடத்துவது என்பது முடியாத விஷயம் என்பது நிரூபணமாகிவிட்டது. கடந்த இரு மாதங்களாகப் பல்வேறு ஊர்களில் ஏராளமான இளைஞர்கள் படுகாயமடையவும் உயிரிழக்கவும் நேரிட்டுள்ளது. ஒரு ஜல்லிக்கட்டில் காவலுக்குச் சென்ற போலீஸ் அதிகாரி கூட படுகாயமடைந்திருக்கிறார். ஜல்லிக்கட்டு போட்டிகளை பத்திரமாக நடத்துவதாக உச்ச நீதிமன்றத்தில் வாக்குறுதி கொடுத்து அனுமதி பெற்ற தமிழக அரசு, சொன்னபடி செய்யாததற்காக அதன் மீது நீதி மன்ற அவமதிப்பு வழக்கை இதுவரை யாரும் போடாமல் இருப்பது ஏன்?

## இந்த வார குட்டு

அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தை அறிவியல்பூர்வமாக அலசி எதிர்க்கும் அறிவிருப்பது போல, சேது கால்வாய் திட்டத்தை அறிவியல் அடிப்படையில் அலசி ஆராய்ந்து எதிர்க்காமல், பி.ஜே.பி எதிர்ப்பதால் தான் ஆதரிக்க வேண்டும் என்று கண் மூடித்தனமாக ஆதரிக்கும் மார்க்சிஸ்ட், கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு இ.வா.குட்டு.

# நாறும் தேசபக்தி

தேசபக்தி என்றால் என்ன என்பது பற்றி நம் நாட்டில் எப்போதும் குழப்பம்தான். தேசிய கீதம் பாடும்போது எழுந்து நிற்பது மட்டுமே தேசபக்தி என்று சிலர் நம்புகிறார்கள். அதை தப்புத் தப்பாகப் பாடினால் அப்போது, எழுந்து நிற்காமல் இருப்பது கூட தேசபக்திதான் என்பது என் கருத்து.

சென்னையில் ஒரு திரையரங்கில் ஏ.ஆர்.ரகுமான் இசையில் எஸ். பி.பாலசுப்ரமணியம் பாடிய ஜனகணமன பாடலை காட்டிவருகிறார்கள். பாடல் ஆரம்பிப்பதற்கு முன்னால் தயவுசெய்து எழுந்து நில்லுங்கள் என்று ஒரு கார்டு வேறு. இந்திய அரசு நிர்ணயித்துள்ள தேசியகீதமான ஜன கண மன பாடலுக்கு என்று குறிப்பிட்ட டெம்போ (கதி) இருக்கிறது. அதன்படி பாடினால் எத்தனை செகண்டுகளில் பாடல் முடியும் என்று ஒரு வரையறை இருக்கிறது.

ஆனால் ரகுமான் - எஸ்.பி.பி ஜனகணமன பாட்டோ அசல் மெட்டை நீட்டி முழக்கி அரசு நிர்ணயித்துள்ள வரையறையைப் பின்பற்றாமல் படு ஸ்லோவாக அமைக்கப்பட்டிருந்தது. இப்படி தேசிய கீதத்தைப் பாடுவது அதை அவமதிப்பதாகும். எனவே அடுத்த முறை நான் அரங்குக்குச் சென்றபோது, இதப் பாடலுக்கு எழுந்து நிற்க மறுத்துவிட்டேன். இதெல்லாம் தேசபக்தி பெயரால் நடக்கும் வியாபாரம் என்பதே என் கருத்து. இந்தப் பாடலுக்கு முன்னால் தணிக்கைச் சான்றிதழும் இல்லை. சட்டப்படி இரண்டு குற்றங்கள். இதற்கு எழுந்து நின்றால் இரு குற்றங்களுக்கும் உடந்தையாக இருந்த குற்றத்தைச் செய்தவர்களாவோம்.

தேசபக்தி பற்றிய இன்னொரு குழப்பம் எப்போதுமே ராணுவம் சம்பந்தப்பட்டது. ராணுவங்களோ போலீஸோ தேவைப்படாத ஒரு

தேசமாக நாம் இருக்கவேண்டும் என்பது என் பல லட்சியக்கனவுகளில் ஒன்று.

இன்றைய உலகத்தின் யதார்த்த நிலையில் அது சாத்தியமில்லையென்பதால், அவற்றை ஒரு 'நெசசரி ஈவில்' (தமிழில் - அவசியமான தொல்லை) என்பதாக சகித்துக் கொள்கிறேன்.

கார்கில் யுத்த சமயத்தில் அதை நேரில் கண்டு எழுத ஒரு பத்திரிகை என்னை கார்கிலுக்கு அனுப்பியிருந்தது. சென்ற இடத்தில் ஸ்ரீநகரில் யுத்தத்தை எதிர்த்தும் இந்திய ராணுவத்தைத் திரும்பப் பெறக் கோரியும் சிலர் தினசரி ஆர்ப்பாட்டங்கள் நடத்திக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். பல்லாயிரம் கிலோமீட்டருக்கப்பால் இருக்கும் தமிழ்நாட்டில் தேசபக்தி பொங்கி வழிந்தது கொண்டிருக்கிற வேளையில், யுத்தம் நடக்கிற காஷ்மீர் மாநிலத்தில் இப்படி ஒரு ஆர்ப்பாட்டம், அரசால் தடை செய்யப்படாமல் தினசரி நடந்துகொண்டிருப்பது வியப்பாக இருந்தது.

என் தொடர் கட்டுரையில் போராட்டக்காரர்களை பேட்டி கண்டு எழுதினேன். ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணித் தலைவர் யாசின் மாலிக்கின் பேட்டி வெளியானதுமே, தமிழ்நாட்டில் சில போலி தேசபக்தர்கள் கொதித்தெழுந்து பத்திரிகைக்கு மிரட்டல் கடிதங்கள் அனுப்பி அந்தத் தொடரையே நிறுத்த வைத்தார்கள்!

உண்மையான தேசபக்தி என்பது உண்மை நிலையை மக்களுக்குச் சொல்வதுதான் என்று இன்றும் நான் நம்புகிறேன். தேசம் என்பது அதில் இருக்கும் மக்கள்தான். வெறும் மண்ணும் கல்லும் அல்ல. தேசத்தில் இருக்கும் மக்களைப் பற்றிக் கவலைப்படுவதுதான் தேசபக்தி.

ஆயிரக்கணக்கான விவசாயிகள் தற்கொலை செய்யும் நிலை ஏன் வருகிறது என்பதைப் பற்றி இன்னும் கூட தேசம் போதுமான அக்கறை காட்டவில்லை. இப்போது 60 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புக்கு விவசாயிகளின் கடனைத் தள்ளுபடி செய்யப்போவதாக நிதி அமைச்சர் அறிவித்ததும் விதவிதமான குரல்கள் எழுகின்றன. விவசாயத்துக்கு இலவச மின்சாரம் முதல் எந்த விதமான மான்யங்களும் தரப்படக் கூடாது என்பது இதில் ஒரு குரல்.

ராணுவத்துக்கு நாம் செய்யும் செலவைப் பற்றி இங்கே ஒரு முணுமுணுப்பு கூட கிடையாது. இந்த வருட பட்ஜெட்டில்

ராணுவத்துக்கு ஒதுக்கியிருக்கும் தொகை ஒரு லட்சத்து ஐயாயிரத்து அறுநூறு கோடி ரூபாய்கள்! அதாவது ஒரு கோடி, ரெண்டு கோடி என்று எண்ணிக் கொண்டே போனால், 1,05,600 கோடி... கற்பனை செய்யவே பிரும்மாண்டமான தொகை! இது வீண் வெட்டிச் செலவு என்று சொல்லுவதனால் என்னை தேச விரோதி என்று சொன்னால், அப்படிச் சொல்லுபவர்கள்தான் உண்மையில் தேச விரோதிகள்.

உங்கள் தெருவில் வீடு புகுந்து திருடுபவர்களால் ஆபத்து அதிகம் என்ற நிலையே இருந்தாலும் வீட்டுக் கதவைப் பூட்டி வைப்பதற்காக, குடும்பத்தின் மளிகைச் செலவு, படிப்புச் செலவு, மருத்துவச் செலவு இதை விட அதிக விலையில் ஒரு பூட்டு வாங்கி மாட்டுவீர்களா என்ன? இந்தியா அதைத்தான் செய்துகொண்டிருக்கிறது. இந்த அபத்தத்தைப் பற்றி எந்த அறிஞரும் அரசியல்கட்சியும் வாயைத் திறப்பதே இல்லை.

இந்த வாரம் அம்பலமாகியிருக்கும் ஒரு பாதுகாப்புத் துறை முறைகேடு படித்தால் நிச்சயம் உங்கள் ரத்தம் கொதிக்கும். கொதிக்காவிட்டால் நீங்கள் ஒரு போலி தேசபக்தர்.

மத்திய கணக்குத் தணிக்கைத் தலைவர் அறிக்கையில் கடற்படைக்காக வாங்கிய 'ஐஎன்எஸ் ஜல்ஷ்வா' கப்பல் பற்றிய தகவல்கள் இதோ: இந்தக் கப்பல்தான் இப்போது இந்தியக் கடற்படையிலேயே மிகப்பெரிய கப்பல்களில் இரண்டாம் இடத்தில் இருப்பது. அமெரிக்காவிடமிருந்து இந்தியா வாங்கியிருக்கும் முதல் போர்க் கப்பல் இது. தயாரிக்கப்பட்டதோ 1971ல். இதை 35 வருடங்களாக 2006 வரை அமெரிக்கா பயன்படுத்தி வந்தது. காயலான் கடைக்கு அனுப்பிவிடலாம் என்று அமெரிக்கா கருதிய சமயத்தில் இந்தியா இளிச்சவாயனாகப் போய் விலைக்கு வாங்கியிருக்கிறது.

இந்தக் கப்பலிலிருந்து ஸீகிங் ஹெலிகாப்டர்கள், பீரங்கிகள் முதலியவற்றையெல்லாம் இயக்கலாம் என்றும் கரையில் நடக்கும் யுத்தத்தில் கடலிலிருந்து உதவுவதற்கு மிகச் சிறந்த கப்பல் இது என்றும் இந்தியக் கடற்படை அதிகாரபூர்வமாகக் கூறியது.

ஆனால், சொல்வதற்கே வெட்கக்கேடான விஷயம் என்னவென்றால் இந்தக் கப்பலை எந்த யுத்தத்திலும் பயன்படுத்தக் கூடாது என்று விற்கும்போதே அமெரிக்கா நிபந்தனை விதித்திருக்கிறது. போரிலே பயன்படுத்தமாட்டோம் என்று ஒப்புக் கொண்டு ஒரு போர்க் கப்பலை

வாங்கிய புத்திசாலி தேசம் நம் தேசம். அகிம்சைத் தத்துவத்துக்கு புது வெளிப்பாடோ என்னவோ.

அமெரிக்காவின் இரண்டாவது நிபந்தனை எந்த நேரத்திலும் கப்பலுக்குள் வந்து என்னென்ன ஆயுதம் வைத்திருக்கிறோம் என்று சோதனையிடும் உரிமை அதற்கு உண்டாம்!

இந்த இரண்டு முட்டாள்தனங்களுக்கு நாம் கொடுக்கும் விலை என்ன தெரியுமா? கப்பலைத் தயார் நிலையில் வைக்க ஆகும் செலவு என்று அமெரிக்கா சொல்லி, நாம் ஒப்புக் கொண்டிருக்கும் மதிப்பீடு சுமார் 202 கோடி ரூபாய்கள்!

கப்பலைப் போன வருடம் வாங்கிவிட்டோம். போன மாதம் விசாகப்பட்டினத்தில் ஆறு கடற்படை வீரர்கள் இந்தக் கப்பலில் இறந்தார்கள். கொன்றது எதிரிகள் அல்ல, பயிற்சியில் ஈடுபட்டபோது, கப்பலில் வாயுக் கசிவு ஏற்பட்டு அவர்களைக் கொன்றது! தேசத்துக்காக இப்படியெல்லாம் உயிர் துறப்பது எவ்வளவு பெரிய கொடுமை.....

இந்திய அமைதிப்படை இலங்கையில் செய்த அட்டூழியங்களைப் பற்றி ஓரளவாவது தமிழகத்தில் பேசப்படுகிறது. இந்தியாவுக்குள்ளேயே வடகிழக்கு மாநிலங்களில் தீவிரவாத ஒழிப்பு என்ற பெயரில் செய்யும் கொடுமைகள் பற்றி கண்டுகொள்வதே இல்லை. மணிப்பூரில் பெண்கள் எல்லாரும் நிர்வாணமாக ஊர்வலம் போய் ராணுவத் தலைமையகம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்தபிறகும், எட்டு வருடமாக கவிஞர் ஐரம் ஷர்மிளா உண்ணாவிரதப்போராட்டம் நடத்தி வந்த போதும், அங்கே கொடூரமான, ராணுவச்சட்டத்தை எந்த அரசியல் கட்சியும் திரும்பப் பெறத் தயாராக இல்லை. மக்களுக்காக ராணுவமும் போலீசும் என்பது மாறி, அவற்றுக்காக மக்கள் என்ற அணுகுமுறைதான் ஏற்பட்டிருக்கிறது.

ராணுவத்துறைக்கு ஒதுக்கப்படும் நிதியில் எவ்வளவு ஊழலில் வீணாகப் போகிறது என்பது பற்றித் தனிக் கட்டுரையே எழுதலாம். ராணுவத்தில் பொருட்கள் வாங்குவதில் ஊழல்கள் தொடர்பாக, தான் பதவியேற்ற ஓராண்டுக்குள் 120 விசாரணைகளுக்கு உத்தரவிட்ட வடக்குப் பிரிவுத் தலைவர் லெப்டினெண்ட் ஜெனரல் பனாக் வேறு இடத்துக்குத் தூக்கியடிக்கப்பட்டிருக்கிறார். அவர் விசாரணைக்கு உத்தரவிட்ட ஊழல்கள் பலவிதம். போர்ப் பயிற்சி முடிந்து படைகள் வேறு இடத்துக்கு திரும்பியபிறகு, அவர்கள் பயிற்சிக்காலத்தில் தங்குவதற்கென்று கூடாரங்கள் வாங்கியது, முட்டை வாங்கியது,

ரேஷன் பொருட்கள் வாங்கியது என்று ஒவ்வொரு ஊழலும் கோடிக்கணக்கான ரூபாய்கள் சம்பந்தப்பட்டவை.

புல் பூண்டு கூட முளைக்காத ஆள் நடமாட்டமே இல்லாத கொடும் பனிப்பிரதேசமான சியாச்சின் பகுதியைப் 'பாதுகாக்கும்' படைகளுக்கான ரேஷன் பொருட்களில் ஊழல் நடந்ததை ஜம்மு காஷ்மீர் போலீஸ் கண்டுபிடித்து 11 வழக்குகள் பதிவு செய்திருக்கிறது. ராணுவத்தினர் 35 பேர் கைதானார்கள். வழக்கு விசாரணையின்போது குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஊழலுக்குக் காரணம் என்று அடையாளம் காட்டியிருப்பவர்கள் எல்லாம் உயர் அதிகாரிகள்.

ஒரு ராணுவ கமாண்டருக்கு அமைச்சரவை ஒப்புதல் இல்லாமல் 30 கோடி ரூபாய் வரை பொருட்கள் வாங்க அதிகாரம் தரப்பட்டிருக்கிறது. ஒப்புதலுடன் 100 கோடி வரை அவர் செலவு செய்யலாம். இதெல்லாம்தான் ஊழலுக்கு முக்கியக் காரணம்.

இன்னொரு பக்கம் போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாததால், உயிர் காக்கும் மருந்து தயாரிக்கும் மூன்று பொதுத் துறை நிறுவனங்கள் தமிழ்நாட்டில் மூடப்படும் நிலை வந்திருக்கிறது.

ஆட்கொல்லி நோயில் உள்ளுக்குள்ளேயே கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொண்டிருக்கும் ஒரு தலைவருக்கு கோடிக்கணக்கான ரூபாய் செலவில் கறுப்புப்பூனைக் காவல் அளித்தால் எப்படி இருக்கும்? அப்படிப்பட்ட முட்டாள்தனத்தில் நம் தேசமே 'தேசபக்தி' என்ற பெயரில் ஈடுபட்டிருக்கிறது.

இதைப் பற்றியெல்லாம் தி.மு.க, அ.தி.மு.க, பாம.க, ம.தி. மு.க, தே.மு.தி.க, வகையறாக்களுக்கெல்லாம் ஏதாவது கருத்தோ அக்கறையோ உண்டா என்று அறிய ஆவலாக இருக்கிறேன். அல்லது வழக்கம் போல் இதெல்லாம் 'தேசிய' சமாச்சாரம்; காங்கிரஸும் பி.ஜே.பி.யும் இடதுகளும் பேசிக் கிழிச்சுக்கட்டும் என்று இருப்பார்களா?

**குமுதம் 02.04.08**

## இந்த வாரக் கேள்வி

தன் மகள் கனிமொழி ஒரு இந்துப் பெண் என்று அறிவித்திருக்கும் கலைஞர் கருணாநிதியும் இந்துவா? அப்படியானால் நாத்திகர்களுக்கு கடவுள் கிடையாது. மதம் மட்டும் உண்டா? அப்படி ஒரு நாத்திகக் கோட்பாடு ஏற்கெனவே உள்ளதா? அல்லது கலைஞர் கண்டருளியதா?

## இந்த வார குட்டு

*கிறிஸ்துவ மதத்துக்குள் தலித் கிறிஸ்துவர்களுக்கும் வன்னிய கிறித்துவர்களுக்கும் இடையே ஆலய வழிபாட்டில் ஜாதி வேறுபாடுகள் காட்டப்படுவதை நீக்காமல் இரு பிரிவினருக்கும் இடையே மோதல்கள் நடக்க காரணமாக இருந்து வரும் புதுச்சேரி மறைமாவட்டப் பேராய நிர்வாகிகளுக்கு இ.வா.குட்டு*

## இந்த வாரச் சிரிப்பு

*மத்தியில் காங்கிரஸ், பி.ஜே.பி கட்சிகளுக்கு மாற்றாக மூன்றாவது அணி அமைக்கப்படும். ஐதராபாதில் இடதுசாரி தலைவர்கள் அறிவிப்பு.*

## இந்த வார குட்டு

*தற்போதைய அரசுக்கு எதிரான வழக்குகள் தன் முன் வரும்போது நடுநிலையாக இருப்பாரா என்ற சந்தேகத்தைத் தூண்டுமென்பதால் நீதிபதி பதவி ஏற்குமுன்பு முதலமைச்சரை சந்தித்து வாழ்த்துப் பெற்ற செயலைத் தவிர்க்கத் தவறியதற்காக சென்னை உயர் நீதி மன்றத்தில் புது நீதிபதி சுப்பையாவுக்கு இ.வா.குட்டு.*

## இந்த வார பூச்செண்டு

*அ.தி.மு.க.விலிருந்து விலகியதும் எந்தக் கட்சியிலும் சேரமாட்டேன் என்று அறிவித்த அடுத்த நாளே தி.மு.க.வில் போய்ச் சேர்ந்ததன் மூலம் அரசியல்வாதிகளின் பல்டி இலக்கணத்தை மீறாமல் நடந்து கொண்டதற்காக வழக்கறிஞர் ஜோதிக்கு இ.வா.பூச்செண்டு.*

# கலைஞர் தரவேண்டிய பிறந்தநாள் பரிசு!

அன்புள்ள முதல்வர் கலைஞர் அவர்களுக்கு,

வணக்கம். உங்கள் சுயசரிதையான நெஞ்சுக்கு நீதி தொடரின் 5-ம் பாகத்தை இந்த வாரத்திலிருந்து எழுதத் தொடங்கிவிட்டீர்கள். மகிழ்ச்சி. 'தன் நெஞ்சறிவது பொய்யற்க; பொய்த்தபின் தன் நெஞ்சே தன்னைச் சுடும்' என்பதை அறியாதவரா நீங்கள்?

இன்னும் சுமார் மூன்று வாரங்களில் உங்கள் வயது மேலும் ஓராண்டு கூடுகிறது. நீங்கள் நூறாண்டுகளை எட்ட இன்னும் தேவைப்படுவது வெறும் 16 வருடங்கள்தான். உலகின் மிக மூத்த குடியானபோதும் தமிழர்கள் இதுவரை மிக அதிக ஆண்டுகள் வாழ்ந்த சாதனையை இன்னமும் எட்டவில்லை. நீங்கள் அந்தச் சாதனையைச் செய்து 120 ஆண்டுகளைக் கடந்து வாழவேண்டுமென்று நெஞ்சார வாழ்த்துகிறேன்.

உங்கள் பிறந்த நாளன்று வழக்கம் போல உடன்பிறப்புகளின் எளிய பரிசுகளும், ஆட்சியில் இருக்கும் காரணத்தால் உங்கள் கவனத்தை ஈர்க்கப் பணக்காரர்கள் அளிக்கும் பெரும்பரிசுகளும் பிறந்த நாளன்று வந்து குவியக்கூடும்.

பதிலுக்கு தமிழக மக்களுக்கு நீங்கள் இப்போது தருவதற்கு ஒரே ஒரு பரிசு உண்டு. அதைத் தரும்படி உங்களுக்கு விண்ணப்பிக்கவே இந்தக் கடிதம்.

முப்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்தில் மதுவிலக்கை நீங்கள் தான் நீக்கினீர்கள். 1937லிருந்து 1971 வரை சுதந்திரத்துக்கு முன்னும் பின்னுமாக 34 வருடங்களாக சுமார் மூன்று தலைமுறைத் தமிழர்களில் பெரும்பாலோர் மது அடிமைகளாக மாறாமல் காப்பாற்றப்பட்டு வந்தார்கள்.

அதை உடைத்து அடுத்த சுமார் நான்கு தலைமுறைத் தமிழர்களில் பெரும்பாலோரை மது அடிமைகளாக மாற்றிய ‘பெருமை’, உங்கள் வரலாற்றின் சாதனைப் பட்டியல்களுக்கு நடுவே அழிக்க முடியாத இழிவாக என்றென்றும் நிலைத்திருக்கும்.

நீங்கள் செய்த இழிவை நீங்களே மாற்றியமைக்கும் வாய்ப்பு ஆட்சியில் இருக்கிற காரணத்தால் உங்களுக்கு இப்போது இருக்கிறது. மீண்டும் மதுவிலக்கை உங்கள் பிறந்த நாள் பரிசாக அறிவியுங்கள்.

டாக்டர் ராமதாஸ் 2011-ல் ஆட்சியைக் கைப்பற்றியபின் அதை அறிவித்துக் கொள்ளட்டும் என்று நீங்கள் கிண்டல் செய்திருப்பதை நான் அறிவேன். அந்த கிண்டலின் மறுபக்கத்தை நீங்கள் உணர வேண்டும். மதுவிலக்கு வேண்டுமா, வேண்டாமா என்ற ஒற்றைப் பிரச்னையை முன்வைத்து தேர்தலைச் சந்தித்தால், தி.மு.க. என்ற யானை, பா.ம.க என்ற எறும்பிடம் தோற்றுவிடும் வாய்ப்பு நிச்சயம் இருக்கிறது.

மகன் இறந்ததும் அவனை உயிர்ப்பிக்கக் கோரி அழுத தாயிடம், புத்தர் மரணமே நிகழ்ந்திராத ஒரு வீட்டிலிருந்து ஒரு பிடி கடுகு வாங்கி வரச் சொன்ன கதை உங்களுக்குத் தெரியும். இன்றைய தமிழகத்தில் அந்தக் கதை நடந்தால், குடியினால் குடும்ப உறுப்பினர் ஒருவர் கூட பாதிக்கப்படாத குடும்பத்தில் கடுகு கேட்கும்படி புத்தர் சொல்வாராயிருக்கும்.

ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு குடிகாரன் கதை இருக்கிறது. குடியால் தன் வாழ்க்கையையே வீணாக்கிக் கொண்டவர்கள் உதாரணங்களைத் தேடி நாம் வேறெங்கும் போக வேண்டாம். உங்கள் குடும்பத்திலும் உண்டு. என் குடும்பத்திலும் உண்டு. நீங்கள் மதுவிலக்கை நீக்கிய 1971-ல், லாரி டிரைவரான என் தாய்மாமன் முற்றிலும் திருத்த முடியாத பெரும் குடிகாரராக மாறித் திரிந்து அழிந்ததை என்னால் மறக்க முடியாது.

மது குடிப்பதை நான் ஒழுக்கப் பிரச்னையாகப் பார்க்கவில்லை. இன்று தமிழகத்தின் பல ஏழைக் குடும்பங்களைச் சீரழிக்கும் சமூக பொருளாதாரப் பிரச்னையாகவே பார்க்கிறேன்.

இதில் மிகப் பெரும்பான்மையாக கடும் பாதிப்புக்குள்ளாகிக் கொண்டிருக்கிறவர்கள், ‘கல்லானாலும் கணவன்; ஃபுல் ஆனாலும் புருஷன்’ என்ற தாலிக்கு விஸ்வாசமாய் தினம் தினம் செத்துக் கொண்டிருக்கும் ஏழை தமிழ்க் கண்ணகிகள்தான். அவர்களெல்லாம்

நீதி கேட்டு உங்கள் முன் வந்து நின்றால், எரிப்பதற்கு ஒரு மதுரை அல்ல, ஒரு தமிழகமே போதாது.

மது விலக்கை நீக்க நீங்கள் அன்று சொன்ன நியாயங்களும் சரி இன்று சொல்லும் நியாயங்களும் சரி, சாரமற்றவை. தமிழகத்தைச் சுற்றிலும் இருக்கும் எல்லா மாநிலங்களிலும் மது விலக்கு இல்லாத நிலையில், தமிழக மட்டும் நெருப்பு வளையத்தின் நடுவிலுள்ள கற்பூரமாக இருக்கிறது என்று உங்கள் வழக்கமான வார்த்தை விளையாட்டுகளை அன்று செய்தீர்கள். கள்ளச் சாராயம் இன்னும் ஆபத்தானது என்று இன்று சொல்கிறீர்கள்.

எவ்வளவு அபத்தமான வாதம்! நீ குடியிருக்கும் தெருவில் சுற்றியுள்ள எல்லா குடும்பங்களிலும் பெண்களை விபசாரத்துக்கு அனுப்புகிறார்கள்: நீ மட்டும் அனுப்பாமல் இருக்க முடியுமா என்று ஒருவர் கேட்கமுடியுமா?

பிற மாநிலங்களில் இருப்பதைப் போலத்தான் இங்கேயும் இருக்க முடியும் என்ற உங்கள் வாதப்படிப் பார்த்தால், அங்கெல்லாம் இலவச வேட்டி, புடவை, இலவச டி.வி, இலவச எரிவாயு எதுவும் தருவதில்லையே. இங்கு மட்டும் ஏன் என்று யோசிக்க வேண்டாமா?

தேர்தலில் ஓட்டு வாங்குவதற்காக நீங்கள் அறிவித்த இலவசங்கள் எல்லாம் எந்தப் பணத்திலிருந்து வருகின்றன? அதே ஏழைக் குடும்பங்கள் டாஸ்மாக் கடைகளில் இழந்து கொண்டிருக்கிற சுமார் பத்தாயிரம் கோடி ரூபாயிலிருந்துதானே? ரேஷன் கடையின் அரிசி விற்பனைத் தொகையை விட டாஸ்மாக்கின் மது விற்பனைத் தொகை அதிகமாக இருப்பதை ஆட்சியின் சாதனை என்று சொல்ல முடியுமா?

கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியாது என்று சொல்வதற்கு ஓர் ஆட்சி எதற்கு? காவல் துறை எதற்கு? ஊழலும் லஞ்சமும் கோலோச்சினால் கள்ளச் சாராயத்தை நிச்சயம் ஒழிக்க முடியாதுதான்.

முழு மதுவிலக்கை உங்களால் ஒரே நாளில் செய்ய முடியாமல் இருக்கலாம். படிப்படியாக அதை நோக்கிச் செல்வதற்கான மன நிலையையாவது தயவுசெய்து ஏற்படுத்திக் கொள்ளுங்கள். முதல்கட்டமாக

தங்கள் பகுதியில் மதுக்கடை இருக்கலாமா, கூடாதா என்பதைத் தீர்மானிக்கும் உரிமையை மக்களுக்குக் கொடுங்கள்.

மராட்டியத்திலே அப்படிப்பட்ட உரிமை மக்களுக்கு இருக்கிறது.

அங்கே மதுவிலக்கு இல்லை. ஆனால் தங்கள் ஊரில் மதுக்கடை வேண்டாம் என்று சொல்லும் உரிமையை அந்த அரசு சட்டப்படி மக்களுக்குக் கொடுத்திருக்கிறது இதன்படி ஒரு கிராமப் பஞ்சாயத்தோ, அல்லது அந்த கிராமசபையில் 50 சதவிகித வாக்காளர்களோ, 'எங்கள் ஊரில் மதுக்கடை வேண்டாம்' என்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினால் அங்கே மதுக்கடையை மூடுவது மாவட்ட ஆட்சியரின் கடமை.

மாநகராட்சி, நகராட்சி, பஞ்சாயத்து எங்கேயும் ஒரு வார்டில் குறைந்தபட்சம் 25 சதவிகித பெண் வாக்காளர்கள் மதுக்கடைக்கு எதிராகக் கையெழுத்திட்டு தீர்மானம் அனுப்பினால், உடனே அந்தப் பகுதியில் மதுக்கடை வேண்டுமா, வேண்டாமா என்று ரகசிய வாக்கெடுப்புத் தேர்தல் நடத்தியாக வேண்டும் இந்தத் தேர்தலில் மொத்த பெண் வாக்காளர்களில் 50 சதவிகிதத்துக்கு மேற்பட்டோர் மதுக்கடை கூடாது என்று ஓட்டளித்திருந்தால், உடனே கடை மூடப்படும். வாக்குச்சீட்டில் கட்சிகளுக்கு சின்னம் தருவது போல இந்த வாக்கெடுப்பிலும் மதுக்கடை இருக்கலாம், இருக்கக்கூடாது என்பதற்கு சின்னங்களை அங்கே அரசு வெளியிட்டிருக்கிறது. நிமிர்த்திய பாட்டில் கடைக்கு ஆதரவுச் சின்னம். கவிழ்த்த பாட்டில் எதிர்ப்புச் சின்னம்.

மராட்டிய காங்கிரஸ் அரசு செய்தது ஒன்றும் வரலாற்றுப் புதுமையல்ல. 1930லேயே தமிழகத்தில் திருச்செங்கோட்டில் மக்கள் மதுக்கடைகளை எதிர்த்தபோது அது பற்றி நேரில் விசாரித்த பிரிட்டிஷ் ஆயத்துறை ஆய்வாளர் மக்கள் விருப்பப்படி கடையை மூட உத்தரவிட்டிருக்கிறார்.

மராட்டிய காங்கிரஸ் அரசு 2003-ல் இத்தகைய சட்டத்தைப் பிறப்பித்த போது, பதிவு செய்யப்பட்ட மகளிர் சமூக சேவை அமைப்புகளுக்கும் ஆட்சேபணைகளைத் தெரிவிக்கும் உரிமையை அளித்தது. பஞ்சாயத்து முதல் மாநகராட்சி வரை இதை செயலாக்கியது. தமிழக காங்கிரஸாருக்கு இதெல்லாம் தெரிந்திருக்காது. தெரிந்திருந்தாலும் உங்களிடம் இது பற்றிப் பேசாமல் இருப்பதையே கூட்டணி தர்மம் என்று நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட சட்டத்தை தமிழகத்திலும் உங்கள் அரசு கொண்டு வருமா என்று கேட்டு முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரியும் சமூகப் பணியாளருமான அ.கி.வேங்கடசுப்பிரமணியன் அண்மையில் உங்கள் அரசுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அதற்கு உங்கள்

உள்துறை செயலாளர் அளித்திருக்கும் பதில் என்ன தெரியுமா?

'அரசு நிறுவனமான டாஸ்மாக்தான் மொத்த சில்லறை மது விற்பனையையும் செய்து வருகிறது. கடைகள் வைக்கும் இடம் பற்றி ஆட்சேபம் வந்தால் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க போதுமான விதிகள் ஏற்கனவே உள்ளன. எனவே மராட்டிய சட்டத்தை இங்கே கொண்டு வரத்தேவையில்லை' என்பதுதான் அவர் பதில்.

கடைக்கு ஆட்சேபணை வந்தால் உங்கள் அரசு என்ன செய்யும் என்பதை கடந்த சில மாதங்களாக திருவல்லிக்கேணி மக்கள் அறிவார்கள். திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த இடத்தில் பள்ளிகளுக்கும் வழிபாட்டு இடங்களுக்கும் அருகில் அடுத்தடுத்து இரு டாஸ்மாக் கடைகள் இருப்பதை ஆட்சேபித்து அவற்றின் முன்பு பல முறை மறியல் செய்த மக்களுக்குக் கிடைத்ததெல்லாம் உங்கள் போலீஸாரின் அடி உதைதான்.

மாநில அரசிடமிருந்து பஞ்சாயத்துகளின் அதிகாரத்தை மத்திய அரசு பறிக்கிறது என்று சொல்லி, பஞ்சாயத்துத் தலைவர்களை, டெல்லியில் நடந்த கூட்டத்துக்கே போக விடாமல் அண்மையில் தடுத்தது உங்கள் அரசு, மதுக்கடைகள் பற்றி முடிவெடுக்கும் அதிகாரத்தை மராட்டியத்தைப் போல பஞ்சாயத்துக்கும் நகராட்சிக்கும் மக்களுக்கும் தரவிடாமல் உங்களை மத்திய அரசா தடுக்கிறது? இல்லையே?

கடந்த 37 ஆண்டுகளில் பல தலைமுறைத் தமிழர்களை குடிகாரர்களாக ஆக்கிய பாவச் செயலுக்கு, வரும் பிறந்த நாளன்று தயவுசெய்து பரிகாரம் தேடுங்கள். அடுத்த நான்கு தலைமுறைத் தமிழர்கள் மது அடிமைகளாக இல்லாமல் உடல் வலிவும் மனத்தெளிவும் கொண்டவர்களாக வாழ்வதை நீங்களே நேரில் கண்டு இன்புற்று நீடூழி வாழ மறுபடியும் என் நெஞ்சார் வாழ்த்துகள்.

உங்கள் பிறந்த நாள் பரிசாக மதுவிலக்கு அரசாணையை எதிர் நோக்கும் மதுவிலிருந்து தப்பித்த தமிழன்

**குமுதம் 14.05.2008**

## இந்த வார பூச்செண்டு -2

உலக சாதனையாக ஒரே ராக்கெட்டில் பத்து செயற்கைக் கோள்களை சரியான பாதையில் ஏவிய இந்திய விண்வெளித்துறை விஞ்ஞானிகளுக்கும் ஊழியர்களுக்கும் இ.வா.பூ.

## இந்த வார குட்டு - 1

*தமிழ்நாட்டில் கல்லூரிப் படிப்பில் தமிழை மொழிப் பாடமாகக் கூடப் படிக்கத் தேவையில்லை என்று அறிவித்திருக்கும் 'முத்தமிழ் அறிஞரின்' ஆட்சிக்கு இ.வா.குட்டு.*

## இந்த வார குட்டு - 2

*ஐ.பி.எல், கிரிக்கெட் போட்டிகளில் மது கம்பெனிகள் மறைமுகமாக மது விளம்பரம் செய்வதை எதிர்த்துப் போடப்பட்ட பொது நல வழக்கைத் தள்ளுபடி செய்து, கிரிக்கெட்டைப் பார்; விளம்பரத்தைப் பார்க்காதே என்று விசித்திர அறிவுரை வழங்கிய உச்ச நீதிமன்றத்துக்கு இ.வா.குட்டு.*

# ஓம் நமோ நாராயணாய...

ஆட்சியையும் பிரதமர் பதவியையும் காங்கிரஸ் கட்சியையும்கூட பணயம் வைக்கும் அளவுக்கு மன்மோகன் சிங் பிடிவாதம் பிடிக்கும் இந்திய அமெரிக்க அணு ஒப்பந்தம் எதற்காக? மின்சாரத்துக்கா? அணுகுண்டுக்கா?

'மின்சாரத்துக்காகத்தான். இது இல்லாவிட்டால் இந்தியாவே இருண்டுவிடும்' என்று மன்மோகன் அரசாங்கம் லட்சக்கணக்கான ரூபாய் செலவில் விளம்பரங்கள் வெளியிட்டு மக்கள் ஆதரவைத் திரட்ட களத்தில் இறங்கியிருக்கிறது.

உண்மையில் இந்த ஒப்பந்தம் மின்சாரத்துக்கானது இல்லை என்ற சந்தேகம் எனக்கு ஆரம்பத்திலிருந்தே உண்டு. நாளுக்கு நாள் வலுப்பட்டு வருகிறது.

மின்சாரத்துக்கான ஒப்பந்தம் என்றால், இதைப் பற்றிய விளக்கங்களை மக்களிடமோ அரசியல் கட்சிகளிடமோ தெரிவிக்க வேண்டியவர்கள் யார் யார்? பிரதமரே நேரடியாகத் தெரிவிக்கலாம். ஆனால் இந்தக் கட்டுரை அச்சாகும்வரை அவர் இதர அரசியல் கட்சித் தலைவர்களிடம் நேருக்கு நேர் பேசவில்லை; டி.வி. பேட்டிகளும் தரவில்லை. அடுத்தபடியாக மத்திய மின்சார அமைச்சர் பேசியிருக்கலாம். அவரும் இதுவரை பேசவில்லை. மின்சக்தித் துறை செயலாளர் போன்ற அதிகாரிகளும் பேசவில்லை.

ஒரே ஒரு அதிகாரிதான் தொடர்ந்து பத்திரிகை, டி.வி. சிறப்பு பேட்டிகளில் பேசிவருகிறார். ஒப்பந்தத்தை எதிர்த்து வந்த சமாஜ்வாதி கட்சியின் அமர்சிங்குக்கு, ஒரு மணி நேரத்துக்குள் இந்த ஒப்பந்தத்தின் சிறப்புகளைச் சொல்லிப் புரியவைத்து மனம் மாற்றியதும் அதே அதிகாரிதான்.

அவர், பிரதமர் மன்மோகன் சிங்கின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான மாயன்கோட்டை கேளத் சிவி.நாயர் நாராயணன் என்கிற எம்.கே. நாராயணன்!

ஏன் 'பாதுகாப்பு' ஆலோசகர் மின்சாரத்துக்கான அணு ஒப்பந்தம் பற்றிய விளக்கங்களை அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் தேச மக்களுக்கும் விளக்கிக் கொண்டிருக்கிறார்? ஏனென்றால், உண்மையில் இந்த ஒப்பந்தம் மின்சாரம் பற்றியதே அல்ல என்பதுதான் காரணம். இன்னும் பல கோடி ரூபாய்களைக் கொட்டிக் குவித்தாலும் இப்போதைய 3 சதவிகிதத்திலிருந்து அணு மின்சாரத்தின் அளவை, கலாமின் கனவு வருடமான 2020-ல் 10 சதவிகிதம் வரை கூடக் கொண்டு செல்ல முடியாது என்பது தெளிவான விஷயம்.

எம்.கே நாராயணன் கடந்த வாரத்தில் பல்வேறு ஆங்கில டி.வி. சேனல்களுக்கு அளித்து வரும் பேட்டிகளைப் பார்த்தேன். ஒரு பேட்டியின் இறுதியில் பேட்டியாளர் நிகழ்ச்சியை முடிக்கும்போது, பல தடைகளை மீறி இதைச் செய்து முடிப்பதில் நாராயணன் காட்டியிருக்கும் உறுதியையும் வெற்றியையும் பாராட்டினார். நாராயணனின் பதில்: "'இருக்கலாம். ஆனால் நான் வில்லனா, தேவதையா என்று தெரியவில்லை. போகப் போகத் தெரியலாம்."

ஒப்பந்தத்துக்கு எதிரான தடைகளை அடித்து நொறுக்கி முன்னேற மன்மோகனின் போர் தளபதியாகத் திகழும் 74 வயது நாராயணன் மின் துறை தொடர்பானவரும் அல்ல; அணுசக்தித் துறை விஞ்ஞானியும் அல்ல! வாழ்க்கை முழுக்க இந்திய உளவுத் துறையில் பணியாற்றியவர். ஐ.பி.. எனப்படும் இன்டெலிஜென்ஸ் பீரோவின் தலைவராக இருந்தவர்.

பேட்டியாளர் கேட்ட இன்னொரு கேள்வி: "'இவ்வளவு சிக்கலான ஒப்பந்தத்தை எப்படி அமர் சிங்குக்கு ஒரு மணி நேரத்துக்குள் புரியவைத்து சம்மதத்தைப் பெற்றீர்கள்?" நாராயணன் பதில்: அது என்னுடைய அறிவுக் கூர்மையாக (பிரில்லியன்சாக) இருக்கலாம். அல்லது அற்புதமாக (மிராகிளாக) இருக்கலாம். ஆனால் அது அப்படித்தான் நடந்தது!"

"பிரகாஷ் காரத் உள்ளிட்ட இடதுசாரித் தலைவர்களையும் இதே போல் நீங்கள் சந்தித்து மனம் மாற்றியிருக்கலாமே" என்று பேட்டியாளர் கேட்டார் அவர்கள் என்னை சந்திக்க முன்வரவில்லையே" என்றார் நாராயணன்.

நிச்சயம் இப்போது மன்மோகன்சிங்குக்கு நாராயணன் ஒரு தேவதைதான்.

"ஆனால், கடந்த காலத்தில் பலரும் அவரை ஒரு வில்லன் என்றே சொல்லியிருக்கிறார்கள். அணு ஒப்பந்த விவகாரத்தில் இடதுசாரிகள் மத்திய அரசுக்கு ஆதரவை திரும்பப் பெறும் பரபரப்பு நடந்து கொண்டிருந்த அதே சமயத்தில், காஷ்மீரில் காங்கிரஸ் அரசு அமர்நாத் நில விவகாரத்தால் ஆட்டம் கண்டது. முஃப்டி முகமது சயீது கட்சியின் ஆதரவை இழந்து நம்பிக்கை வாக்கை சந்திக்கும் நெருக்கடியில் இருந்தது.

அப்போது தன்னை நாராயணன் மிரட்டியதாக, காஷ்மீர் பேந்த்தர் கட்சித் தலைவர் டாக்டர் பீம்சிங் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். பேந்த்தர் கட்சி எம்.எல்.ஏ.க்கள் ஓட்டுப் போட்டு காங்கிரஸ் ஆட்சியைக் கவிழாமல் காப்பாற்றத் தவறினால், பீம்சிங்கின் பாதுகாப்பு ரத்து செய்யப்படும் என்றும், அவரால் காஷ்மீருக்கும் போக முடியாது; டெல்லியிலும் இருக்கமுடியாது என்றும் நாராயணன் மிரட்டினாராம்.

தான் மிரட்டவில்லை என்று மறுத்தார் நாராயணன். ஆனால் பீம்சிங்கிடம் பேசியது உண்மைதான் என்று ஒப்புக் கொண்டார். 'காஷ்மீரில் தற்போது நிலவும் சூழலில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசாங்கத்தை ஆதரிக்க நீங்கள் விரும்புவதுதானே இயற்கையாக இருக்க முடியும்' என்று மட்டுமே பீம்சிங்கிடம் தான் சொன்னதாக நாராயணன் தெரிவித்தார்!

ஒரு மாநில அரசு கவிழும்போது அதைக் காப்பாற்ற இதர கட்சித் தலைவர்களிடம் பேசுவதும், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரின் பணிகளில் ஒன்று போலிருக்கிறது!

நாராயணன் இப்போது மட்டுமல்ல, இதற்கு முன்பும் பலமுறை சர்ச்சைகளில் அடிபட்டவர். நரசிம்மராவ் ஆட்சியின்போது உள்துறைச் செயலராக இருந்தவர் ஐ.ஏ.எஸ் அதிகாரி மாதவ் காட்போல். பாபர் மசூதி இடிப்பிற்குப் பின் பதவியிலிருந்து விலகிய அவர் எழுதிய நினைவுக் குறிப்புகளில், ஐ.பி. அதிகாரி நாராயணன் பற்றி பிரதமரிடம் தான் புகார் செய்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார். தன்னிடமோ உள்துறை அமைச்சரிடமோ தெரிவிக்காமல், உல்ஃபா தீவிரவாதிகளுடன் நாராயணன் பேச்சு வார்த்தை நடத்தி பிரதமரையும் சந்திக்கவைத்தாராம். சந்திப்பு நடந்த பிறகுதான் தங்களுக்குத்

தெரியும் என்கிறார் மாதவ். இதனால் ராணுவத்துக்கும், அரசுக்கும் பல சிக்கல்கள் ஏற்பட்டன என்கிறார்.

நாராயணன் பல சமயங்களில் ஓர் அரசு அதிகாரி போல பேசாமல், அரசியல் தலைவர் போலப் பேசிவிடுகிறார் என்பது அவர் மீது வைக்கப்படும் இன்னொரு விமர்சனம். பாகிஸ்தானில் பெநசீர் புட்டோ கொல்லப்படும் முன்னர், தேர்தலில் ஜெயித்து பிரதமராகும் வாய்ப்பு பிரகாசமாக இருந்தது. பேநசீர் பிரதமரானால் இந்தியாவுடன் உறவு மேம்படும் என்று சொல்ல முடியாது என்று கருத்து தெரிவித்தார் நாராயணன்! சொன்ன வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றுவார் என்று நம்பமுடியாதவர் பேநசீர் என்றார் நாராயணன். ஒரு அதிகாரி இப்படியெல்லாம் கமெண்ட் அடிப்பது மரபுக்கு விரோதமானது.

அண்மையில் இலங்கைக்கு நாராயணனும் இந்திய உயர் அதிகாரிகளும் சென்று வந்தனர். அப்போது நாராயணன் தமிழர் தலைவர் சம்பந்தனிடம் காராசாரமாக வாக்குவாதம் செய்ததாக விடுதலைப்புலிகள் ஆதரவு இணைய தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. 'ராஜீவ் கொலைக்கு பரிகாரமாக, குற்றம் சாட்டப்பட்ட பிரபாகரனை இல்லாவிட்டாலும் குறைந்தபட்சம் பொட்டு அம்மனையாவது இந்தியாவிடம் ஒப்படைக்காமல், எப்படி இந்திய அரசு இலங்கைத் தமிழருக்கு ஆதரவாகச் செயல்படமுடியும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?' என்று அவர் சம்பந்தனைக் கேட்டாராம். இப்படிச் கடுமையாகப் பேசிவிட்டதால் அவரைச் சமாதானப்படுத்தும்படி பின்னர் இந்திய ஹைகமிஷனரிடம் சொன்னாராம்.

திரைமறைவில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றிய எதிரெதிர் தரப்புத் தகவல்களைப் பொதுவாக ஊர்ஜிதம் செய்வது கடினம். பீம்சிங். மாதவ் காட்போல், புலி ஆதரவு தளங்கள் சொல்பவை எல்லாம் உண்மையாக இருந்தால், நாராயணன் நாடாளுமன்றத்துக்கும் ஜனநாயகத்துக்கும் சட்டத்துக்கும் அப்பாற்பட்ட ஒரு சூப்பர் ப்ரைம் மினிஸ்டராக இருக்க வேண்டும். அவற்றில் பாதியளவு உண்மையிருந்தால்கூட, அது கவலைக்குரிய விஷயம்தான்.

நாராயணன் வில்லனா, தேவதையா, வேலு நாயக்கரா என்ற ஆராய்ச்சி ஒரு பக்கம் இருக்கட்டும். ஒரு பாதுகாப்பு ஆலோசகர் இந்த அளவுக்கு அணுசக்தி ஒப்பந்த வேலைகளில் பங்கேற்கும்போது, ஒப்பந்தத்தின் அசல் நோக்கம் மின்சாரமாக மட்டும் இருக்க முடியாது என்றே கருதவேண்டியிருக்கிறது.

ஒப்பந்தப்படி இந்தியா இப்போது வைத்திருக்கும், இனி ஆரம்பிக்கப்போகும் அணு உலைகளில் எவையெல்லாம் ராணுவத் தேவைக்கானவை, எவை மின்சாரத்துக்கானவை என்பதை பிரித்துப் பட்டியலிடும். மின்சார உலைகளை மட்டும் சர்வதேச அணுசக்திக் கழகமான ஐ.ஏ.ஈ.ஏவின் கண்காணிப்புக்கு உட்படுத்தும். இப்படிச் செய்தால் அமெரிக்காவும் இதர நாடுகளும் இந்தியாவுக்கு யுரேனியத்தையும் அணு உலைகளையும் அள்ளி அள்ளி வழங்கும் வாய்ப்பு ஏற்பட்டுவிடும். இதுதான் ஒப்பந்தத்தின் சாரம்.

இங்கேதான் என் முதல் சந்தேகம். நம்மிடம் உள்ள யுரேனியம் போதவில்லை என்பதே உண்மைதானா? மின்சார உலைகளுக்கு அமெரிக்கா, இதர நாடுகளிடமிருந்து யுரேனியத்தை இறக்குமதி செய்துவிட்டு, நம் வசம் உள்ள யுரேனியத்தை முழுக்கவும் அணு ஆயுத தயாரிப்புக்குத் திருப்பி விடுவதுதான் அசல் நோக்கமா?

ஒரு டி.வி. பேட்டியிலே நாராயணன் போகிற போக்கில் தெரிவித்த இன்னொரு தகவல் பெரும் கவலையை எழுப்புகிறது. ஒப்பந்தம் முடிந்து அணு உலைகளையும் யுரேனியத்தையும் இறக்குமதி செய்யும்போது, இந்தியாவின் அணுசக்தி சட்டத்தை திருத்த வேண்டி வரும் என்றார்.

எதற்காக? எல்லா உலைகளையும் அரசே நடத்த முடியாது. தனியார் வசமும் தரவேண்டியிருக்கும். அதற்கேற்ப சட்டத்தைத் திருத்தவேண்டியிருக்குமாம்.

அரசு வசம் இருக்கும்போதே, கதிர்வீச்சு அளவு, ஊழியர் பாதுகாப்பு, அணுக் கழிவுகள் நிலைமை உள்ளிட்ட பல விஷயங்களுக்கு சரியான தகவல்களைப் பெற முடியாத சூழல் இருக்கிறது. தனியார் வசம் அணு உலைகளை ஒப்படைத்தால்........ அய்யோ, தோல் பதனிடுதலால் நாசமான ஆம்பூர், பாலாறு, சாயப்பட்டறைகளால் அழிந்த கொங்கு மண்டலம், 24 வருடமாகியும் வாயு விபத்துக்கு நஷ்ட ஈடு தரப்படாத போபால் எல்லாம் நினைவுக்கு வருகின்றன.

தனியார் தொழிலதிபர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதும், பதில் சொல்லவைப்பதும், கறாராக தண்டிப்பதும் மேற்கு நாடுகளில் சாத்தியமாகலாம், இந்தியாவில் இருக்கும் 'எதிலும் ஊழல்; எங்கும் ஊழல்' என்ற அரசியல் நிர்வாகச் சூழலில், ஆபத்தான அணு உலைகளை தனியாரிடம் ஒப்படைப்பது பேரழிவுக்கு வழி வகுத்துவிடக் கூடும். இட ஒதுக்கீடு என்ற சமூக நீதியையும் தகவல்

அறியும் உரிமை என்ற ஜனநாயக நீதியையும் இன்னமும் தனியார் துறைக்கு நம்மால் கொண்டு வர முடியவே இல்லை.

ஓம் நமோ நாராயணாய... இந்திய-அமெரிக்க அணு ஒப்பந்தம் என்னை அஸீனாக்கிவிடும் போலிருக்கிறதே!

**இந்த வார குட்டு**

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் துன்புறுத்தப்படுவதையும் சுட்டுக் கொல்லப் படுவதையும் தடுக்க எதுவும் செய்யாமல் அலட்சியமாக இருந்து வரும் தமிழக அரசுக்கும் மத்திய அரசுக்கும் இவா.குட்டு.

**இந்த வாரத் தகவல்**

ஒலிம்பிக் தொடக்க விழாவுக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு சீன அரசு அழைப்பு தரவில்லை. இந்தியாவிலிருந்து சோனியா காந்தியை மட்டுமே அழைத்திருக்கிறது. - சோனியா காந்தி

**இந்த வார பூச்செண்டு**

மகாராஷ்டிரத்தில் எந்த மீடியம் பள்ளியானாலும் மராத்தியை ஒரு மொழிப்பாடமாக எல்லா மாணவர்களுக்கும் கட்டாயமாகக் கற்றுத் தராவிட்டால் பள்ளியை மூடச் செய்வோம் என்று அறிவித்திருக்கும் ராஜ் தாக்கரேவுக்கு இ.வா. பூ.

**குமுதம் 23.07.08**

# தமிழகம் 5 வெட்கக்கேடுகள்

## வெட்கக்கேடு-1

பூங்கோதையின் அமைச்சர் பதவி நிலைக்குமா, அவர் பதவி விலகலை கலைஞர் ஏற்றுக் கொண்டு விடுவாரா மாட்டாரா என்று ஒரு நண்பர் என்னிடம் ஆரூடம் கேட்டார். என்ன ஆனாலும் டி.ஆர்.பாலுவின் பதவி நிலைக்கும் என்று அடித்துச் சொல்வது போல இதில் எதையும் நிச்சயமாகச் சொல்லமுடியாது என்றேன். பாலு பதவி மட்டும் நிலைக்கும் என்று எப்படி உறுதியாகச் சொல்ல முடிகிறது என்று கேட்டார் நண்பர்.

’என் மகனின் கம்பெனிக்காக பிரதமர் அலுவலகத்திலும் பெட்ரோலியத்துறை அதிகாரிகளிடமும் சிபாரிசு செய்தேன். அதில் என்ன தவறு? என்று டி.ஆர்.பாலு கேட்டதை, வெட்கக் கேடானது என்று கலைஞர் சொல்லவில்லை என்பது தான் காரணம் என்றேன். கலைஞரின் அகராதியில் எதெல்லாம் வெட்கக் கேடானது, எதெல்லாம் வெட்கக் கேட்டுக்கு அப்பாற்பட்டது என்று இருக்கும் வரையறைகளை ஆராய்ச்சி செய்தால் குழப்பம்தான் மிஞ்சும்.

எம்.ஜி.ஆரும் கம்யூனிஸ்ட் கட்சியினரும் 1972-ல் கலைஞர் மீது ஊழல் புகார்கள் வைத்தபோது அவற்றுக்கு ஜட்டம் வாரியாக பதில் அளிக்கையில், ஒரு குறிப்பிட்ட வீடு யாருக்குச் சொந்தம் என்ற கேள்விக்கு, ‘என் மகள் கனிமொழியின் தாயார்’ என்று பதில் தரவேண்டிய நிலையில் தன்னைத்தானே வைத்துக் கொள்ள நேரிட்டது அவருக்கு வெட்க உணர்ச்சியை ஏற்படுத்தவில்லை.

தமிழால் மட்டுமே வாழ்க்கை முழுக்க தன் பிழைப்பை நடத்தி வந்திருக்கும் அவருக்கு, இன்று தமிழ்நாட்டில் உயர்கல்வியில் தமிழை மொழிப் பாடமாகக் கூடப் படிக்கத் தேவையில்லை என்று

தன்னுடைய ஆட்சியிலேயே முடி வெடுக்கப்படுவது வெட்கக்கேடான விஷயமாகப் படவில்லை.

திருப்பூரிலும் ஈரோட்டிலும் நகரத்தையும் ஆற்றையும் மாசுபடுத்தி சூழலைக் குட்டிச் சுவராக்கியிருக்கும் சாய ஆலை, ஜவுளி ஆலை அதிபர்கள் எல்லாருமாகச் சேர்ந்து திருப்பூர் நகரத்தின் தி.மு.க மேயருக்கு தங்க மாலை அணிவிப்பது முதலமைச்சருக்கு வெட்கக்கேடான விஷயமாகப் படவில்லை. கலைஞருடைய 50 வருடப் பொது வாழ்க்கையில் இதுவரை அவர் வெட்கக்கேடானது என்று வேறு எதையும் வர்ணித்ததில்லை. பூங்கோதைக்கு மட்டுமே அந்த கௌரவம் கிட்டியிருக்கிறது.

கீழ் முதல் மேல் வரை நூற்றுக்கு நூறு அப்பழுக்கற்ற மகாத்மாக்கள் மட்டுமே நிறைந்திருக்கும் தன் கட்சியில், ஒற்றை பூங்கோதை மட்டும் களங்கம் ஏற்படுத்திவிட்டதுதான் அவருக்கு வெட்கக்கேடானதாக இருக்கிறது. அது கூட ஒருசில வாரங்களில் வெட்கத்துக்கு அப்பாற்பட்டதாக ஆகிவிடலாம். ஏனென்றால் ஞாபக மறதி என்ற ஒன்று மட்டும் இல்லாவிட்டால், மனிதனால் நிம்மதியாக வாழமுடியாது என்ற அரிய தத்துவத்தை சில வருடங்கள் முன்பு சொன்னவரும் அவர்தான்.

## வெட்கக்கேடு-2

“என் மனநிலை கருதியும் உடல்நிலை கருதியும் (ஜூன் 3 பிறந்த நாளன்று) வாழ்த்துக்களை ஏற்றிடும் பணியிலிருந்து எனக்கு விலக்கும் ஓய்வும் வழங்க வேண்டுமென்று உற்ற நண்பர்களையும் உயிரனைய உடன்பிறப்புக்களையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று கலைஞர் கருணாநிதி அறிக்கை வெளியிட்ட அடுத்த நாளே கடும் கழுத்து வலி, முதுகு வலியினால் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறச் சென்றார்.

ஓரிரு தினங்கள் சிகிச்சைக்குப் பின் குணமடைந்து வீடு திரும்பினார். ஆனால் என்ன நடந்தது? மருத்துவமனையில் வாராது வந்த மாமணியான பேரன் தயாநிதி மாறன் முதல் பல கட்சி அரசியல் பிரமுகர்களையும், வீடு திரும்பியதுமே, உற்ற நண்பரான சோ ராமசாமி முதல் மத்திய மாநில அமைச்சர்கள் வரையிலும் சந்தித்து நலம் விசாரித்ததை அனுமதித்தார்.

கலைஞருக்கிருக்கும் அதே கழுத்து வலியும் முதுகு வலியும் எனக்கும் உண்டு என்பதால், அதன் வேதனையை நான் நன்றாகவே

அறிவேன். யாராவது வந்தால், எப்போது போய்த் தொலைவார்கள் என்று உள்ளுக்குள் எரிச்சலை ஏற்படுத்தும் வலி கழுத்து வலி. உட்கார்ந்தால் நிற்கத் தோன்றும். நின்றால் படுக்கத் தோன்றும். படுத்தால் வலி அதிகமாகி எழுந்து நடக்கத் தோன்றும். வலியினால் படுத்துத் தூங்க முடியாமல் இரவெல்லாம் நடந்து நடந்து களைத்தபின்னே தூக்கம் வந்து காலையில் படுத்த நாட்கள் பல.

இவ்வளவு கொடுமையான வலிக்கான சிகிச்சை வேளையிலும் வீடு திரும்பிய பின்னரும், அவரைப் போய் பார்த்து நலம் விசாரித்தவர்கள் உண்மையில் நண்பர்களே அல்ல. மேலும் அவரை சித்திரவதைப்படுத்தியவர்கள்தான். அன்பின் பெயரால் கொடுமைப்படுத்துவது என்பது இதுதான். பிறந்த நாளன்றும் இதுதான் நடக்கும்.

இந்த முறை கலைஞருக்கு கடும் வலித் தாக்குதல் ஏற்படுத்தியது எது? சுமார் 40 மணி நேரம் சட்டமன்றத்தில் அவர் விவாதங்களில் பங்கேற்றுப் பேசியதுதான். இப்படிப்பட்ட பணிகளிலிருந்து அவருக்கு ஓய்வு தரப்பட வேண்டும் என்று நான் சொன்னால் உடனே எனக்கு பார்ப்பனீய அர்ச்சனை தொடங்கிவிடும்.

தி.மு.க.வுக்குள் கலைஞர் கருணாநிதிக்கு அடுத்தபடி முதலமைச்சர் பதவி ஸ்டாலினுக்குத்தான் என்பது இன்று பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்ட விஷயம். ஸ்டாலினை முதலமைச்சராக ஏற்க முடியாதவர்களாக இருப்பவர்கள் கட்சிக்காரர்கள் அல்ல. கலைஞர் குடும்பத்தையே சேர்ந்த ஒருசிலர்தான். ஸ்டாலினை என் தலைவராக ஏற்க நான் தயார் என்று மூத்த தலைவரான பேராசிரியர் அன்பழகன் பகிரங்கமாக அறிவித்தது போல ஒருபோதும் அழகிரியோ கனிமொழியோ தயாநிதியோ சொன்னதில்லை.

இந்த நெருக்கடிதான் கலைஞரின் மன நிலையையும் உடல் நிலையையும் தொடர்ந்து நலிவுபடுத்தி வருகின்றன. இதுதான் உண்மை. ஸ்டாலினை முதல்வராக்கிவிட்டு, கலைஞர் கட்சித் தலைவராக வேலைப் பளுக்கள் இல்லாமல் வழிகாட்டும் பொறுப்பை மட்டும் மேற்கொள்ளவேண்டிய தருணம் வந்து பல காலமாகிவிட்டது. மீண்டும் மீண்டும் இதை நிரூபிக்கிற, நினைவுபடுத்துகிற தருணங்களாகவே அவரது மருத்துவமனை விசிட்டையும், ஓய்வுக்காக ஏங்கும் அறிக்கைகளையும் கருதவேண்டும். இந்த நிதர்சனமான உண்மையை ஒப்புக் கொள்ள மறுத்து என்னை வசை பாடும் வேலைகளில் இறங்கும் சூழல் இருப்பதுதான் வெட்கக் கேடானது. .

## வெட்கக்கேடு-3

'கூட இருந்தே குழி பறிக்கும் தோழமைகளும்' கலைஞரின் மன வலிக்குக் காரணம் என்று அவருடைய இன்னும் சில அறிக்கைகள் காட்டியிருக்கின்றன. யார் அப்படி குழி பறிப்பது? நாங்கள் இல்லை என்று மார்க்சிஸ்ட் கட்சி தேவையில்லாமல் அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

டெல்லியில் வேண்டுமானால் குழி பறிக்கும் வல்லமை இடதுசாரிகளுக்கு இருக்கலாம். தமிழகத்தில், குழி என்று சாக்பீசில் போர்டில் எழுதும் பலத்தில் கூட அவர்கள் இல்லை என்பது எல்லாருக்கும் தெரியும்.

கலைஞரின் ஆட்சிக்கு மார்க்சிஸ்ட் கட்சி 60 மார்க் கொடுத்திருக்கும் அதே நேரத்தில் 'நான் எந்த மார்க்கும் போட முடியாது; மக்களே போடுவார்கள்' என்று சொல்லும் டாக்டர் ராமதாசின் பாட்டாளி மக்கள் கட்சியைத்தான், 'கூட இருந்து குழி பறிக்கும் தோழமையாகக் கலைஞர் கருதுகிறார் என்பது தமிழக அரசியலில் நேற்று நுழைந்து இன்று வெளியேறிக் கொண்டிருக்கும் நடிகர் கார்த்திக்கிற்குக் கூடப் புரியும்.

பாவம் பா.ம.க. அது என்ன செய்யும்? டெல்லியில் காங்கிரஸ் ஆட்சிக்கு சிறந்த விமர்சகர்களாக இருக்கும் இடதுசாரிகளால் அதே போல தமிழ்நாட்டில் இருக்க முடியவில்லை. டெல்லியில் எதிர்க்கட்சியாக தொடர்ந்து களத்தில் இறங்கி வேலை செய்யும் பி.ஜே.பிக்கு நிகராக தமிழகத்தில் எதிர்க்கட்சிக் கடமையைச் செய்யும் நிலையில் ஜெயலலிதாவும் அ.தி.மு.க.வும் இல்லை. விசிட்டிங் புரொபசரான சுப்ரமணியன் சுவாமியை நம்பித்தான் ஜெயா டி.வி. யே இயங்க வேண்டியிருக்கிறது.

இப்படிப்பட்ட நிலையில் பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக இயங்கியாக வேண்டிய சுமை பா.ம.க மீது வந்து விழுந்துவிட்டது. இதைப் போய் கூட இருந்தே குழி பறிப்பது என்று சொல்வது வெட்கக்கேடானது அல்லவா. 2011-ல் உனக்கு என்னிடமிருந்து குழியும் பாலும் நிச்சயம் என்று இப்போதே கூட இருந்து சொல்பவன் நல்லவனா, கெட்டவனா?

## வெட்கக்கேடு-4

தெய்வீகச் சிலைகள் மற்றும் தலைவர்களின் சிலைகள் ஆகியவற்றை சேதப்படுத்தி, விகாரப்படுத்தி இழிவுபடுத்தி, பொது

அமைதிக்கு பங்கம் ஏற்படுத்துவோர், மற்றவர்களைக் கலகம் செய்யத் தூண்டுவோர், சாதி மத அடிப்படையில் பல்வேறு பிரிவினரிடையே பகை உணர்ச்சியை வளர்க்க செயல்படுவோர் எல்லாரையும் குண்டர் சட்டத்தின் கீழ் கொண்டு வந்திருப்பதாக தமிழக அரசு அறிவித்திருக்கிறது.

மதுரையில் தேவர் சிலைக்கு 24 மணி நேர போலீஸ் பாதுகாப்புத் தரப்படும் என்று அண்மையில் முதலமைச்சர் அறிவித்திருந்தார். நாட்டில் மனிதனுக்கு முழு நேரப் பாதுகாப்பு இல்லை. சிலைக்குப் பாதுகாப்பு என்பது எவ்வளவு வெட்கக் கேடானது. இந்த நிலைக்கு தமிழ்ச் சமூகத்தை ஆக்கியது யார்? அம்பேத்கர், காமராஜர், சிங்காரவேலர் போன்ற சாதி கடந்த தலைவர்களையெல்லாம் குறிப்பிட்ட சாதிக்கானவர்கள் என்று கொண்டாடும் சூழல் வந்தது எதனால்?

குண்டர் சட்டத்துக்கான புதிய திருத்தத்தின்படி, மதுரை உத்தப்புரத்தில் ஊரைப் பிரித்த சுவரை இடித்ததை எதிர்த்து காட்டுக்குப் போய் உட்கார்ந்து கலகம் செய்யும் அத்தனை உயர்சாதியினரையும் கைது செய்யவேண்டும். எப்போதும் மத துவேஷத்தையே பரப்பி வரும் ராம கோபாலன், இந்து முன்னணி 1, 2, 3 ஆட்களையெல்லாம் கைது செய்யவேண்டும். இதையெல்லாம் நிச்சயம் அரசு செய்யப் போவதில்லை என்பதால், குண்டர் சட்டத் திருத்தம் என்பதே வெட்கக்கேடானது.

### வெட்கக்கேடு-5

தமிழ்த் திரைப்பட இயக்குநர்கள் சங்கத் தேர்தல் கோஷ்டி வேறுபாடு களினால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இதன் பின்னால் இருக்கும் இரு அம்சங்களும் முக்கியமானவைதான். முதலாவது இயக்குநர்களின் ஈகோ காய்ச்சல்கள்.

சராசரி மனிதனை விட தனக்கு இரண்டு கொம்பு எக்ஸ்ட்ராவாக இருப்பதாக நினைக்கும் மெகா சைஸ் ஈகோ சினிமா இயக்குநர்களுக்கு எப்போதுமே உண்டு. சக இயக்குநரை விட தனக்குக் கூடுதல் கொம்பு இருப்பதாக நினைப்பதும் இதன் தொடர்ச்சி.

இதை விட நம் கவனத்துக்குரிய முக்கியமான அம்சம் இரண்டாவதுதான். இயக்குநர்கள் சங்கம் என்பதில் இயக்குநர்களும் இருக்கிறார்கள். உதவி இயக்குநர்களும் இருக்கிறார்கள். இதுதான்

அடிப்படைத் தவறு.

ஒரு தொழிற் சங்கம் என்பதே அதன் உறுப்பினர்களின் வேலை, சம்பளம், உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பே தவிர பொழுதுபோக்கு கிளப் அல்ல. சினிமாவில் உதவி இயக்குநர்களின் வேலைச்சுமை, சம்பளம், சுயமரியாதை எல்லாமே சிக்கலுக்குள்ளாவது தயாரிப்பாளரை விட அதிகம் இயக்குநரால்தான். எனவே இந்த உரிமைகளையெல்லாம் உதவிகளுக்கு சங்கம் யாரிடமிருந்து பெற்றுத் தரவேண்டும்? இயக்குநரிடமிருந்துதான். இருவருமே எப்படி ஒரே சங்கத்தில் இருக்க முடியும்?

இதே நிலைதான் எல்லா உதவிகளுக்கும். எனவே உதவி இயக்குநர்கள், உதவி ஒளிப்பதிவாளர்கள், உதவி படத்தொகுப்பாளர்கள், உதவி சவுண்ட் இன்ஜினீயர்கள் தனியே உதவியாளர்கள் சங்கத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பிரச்சினையைத் தீர்க்காமல் பெப்சி எத்தனை முயற்சித்தாலும், இயக்குநர்கள் சங்க கோஷ்டித் தகராறுகள் தீராது.

தற்போதைய பிரச்னையே இயக்குநர்கள் ஒருபுறமும் ‘உதவி’கள் ஒரு புறமுமாக எதிரெதிர் கோஷ்டிகளாக இருப்பதால்தான் வந்திருக்கிறது. இது அடிப்படை நோயின் அடையாளம். இதுவே நோய் அல்ல. அசல் பிரச்னைகளை அடையாளம் கண்டு அவற்றை சந்திக்க மறுப்பதுதான் சினிமாவின் சாபக்கேடும் வெட்கக்கேடும்.